Downloaded From :http://cbseportal.com/

SET-4

Series JMS

Code No. **10**

Roll No.

Candidates must write the Code on the title page of the answer-book.

- இந்த வினாத்தாளில் அச்சிடப்பெற்ற **20** பக்கங்கள் உள்ளதைச் சரிபார்க்கவும்.
- வினாத்தாளின் வலதுபக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள குறி எண்ணை (Code No.) விடைத்தாளின் தலைப்புப்பக்கத்தில் எழுதவும்.
- இந்த வினாத்தாளில் **16** வினாக்கள் உள்ளனவா எனச் சரிபார்க்கவும்.
- **எழுதத் தொடங்குவதற்கும் முன் வரிசை எண்ணைக் குறிப்பிடவும்.**
- வினாத்தாளைப் படிப்பதற்கு 15 நிமிடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. வினாத்தாள் 10.15 க்குக் கொடுக்கப்படும். 10.15 இல் இருந்து 10.30 வரை வினாத்தாளை மட்டும் படிக்க வேண்டும். இந்த நேரத்தில் விடைத்தாளில் எந்தப் பதிலையும் எழுதக்கூடாது.
- Please check that this question paper contains **20** printed pages.
- Code number given on the right hand side of the question paper should be written on the title page of the answer-book by the candidate.
- Please check that this question paper contains **16** questions.
- **Please write down the Serial Number of the question before attempting it.**
- 15 minute time has been allotted to read this question paper. The question paper will be distributed at 10.15 a.m. From 10.15 a.m. to 10.30 a.m., the students will read the question paper only and will not write any answer on the answer-book during this period.

# தமிழ்

# TAMIL

*கால அளவு : 3 மணி* | *மொ. மதிப்பெண்கள் : 80*

*Time allowed : 3 hours* | *Maximum Marks : 80*



Downloaded From :http://cbseportal.com/ Courtesy : CBSE

Downloaded From : http://cbseportal.com/

**இக்கேள்வித்தாள் நான்கு பிரிவுகளைக் கொண்டது :**

**This question paper is divided into four Sections :**

| | | | |
|---|---|---|---|
| **பிரிவு அ** | : | படித்தல் உரைநடைப்பகுதி | *15 மதிப்பெண்கள்* |
| **SECTION A** | : | Reading Comprehension | *15 Marks* |
| **பிரிவு ஆ** | : | எழுதுதல் | *14 மதிப்பெண்கள்* |
| **SECTION B** | : | Writing | *14 Marks* |
| **பிரிவு இ** | : | இலக்கணம் | *15 மதிப்பெண்கள்* |
| **SECTION C** | : | Grammar | *15 Marks* |
| **பிரிவு ஈ** | : | இலக்கியம் | *36 மதிப்பெண்கள்* |
| **SECTION D** | : | Literature | *36 Marks* |

## பிரிவு அ
## (படித்தல் உரைநடைப்பகுதி)

## SECTION A
## (Reading Comprehension)

*Marks : 15*

**1.** கீழ்வரும் பத்தியைப் படித்து அதனைத் தொடர்ந்து வரும் பல்விடை வினாக்களுக்குரிய சரியான விடைகளைத் தேர்ந்தெடுத்து எழுதுக : *5×1=5*

சிலி நாட்டில் ஒரு சுரங்கம். அது பூமிக்கடியில் ஈராயிரம் அடி ஆழம் உடையது. தங்கமும். தாமிரமும். எடுப்பதற்காக வெட்டப்பட்ட சுரங்கம் அது. அங்கு ஒருநாள் பெரிய விபத்து நேர்ந்தது. கீழே சுரங்கத்தில் வேலை செய்த முப்பத்துமூன்று தொழிலாளர்கள் மேலே வர இயலாதவாறு சுரங்கம் இடிந்து மண் மூடியது. அறுபத்தொன்பது நாட்கள் போராட்டம். சிலி நாட்டு அரசின் அனைத்துத் துறைகளும் அவர்களை வெளிக்கொணரப் பெரிதும் முயன்றன.


Downloaded From : http://cbseportal.com/ Courtesy : CBSE

Downloaded From : http://cbseportal.com/

உள்ளே சிக்கிக் கொண்டவர்கள் சூரியனைக் காணாது நாளும் அல்லல்பட்டாலும் மனந்தளராது இருந்தனர். பூமியின் மேலிருந்து துளைபோட்டு அதன்வழியே உணவும், மருந்தும் அவர்களுக்கு அனுப்பப்பட்டன. உள்ளேயிருந்தவர்கள் மனம் தளராது முறையாக அவற்றைப் பங்கிட்டு உண்டு, வெளியே வரக் காத்திருந்தனர். அவர்களை மீட்கப் பெருந்துளைப் போட்டு அதன்வழியே மீட்புக் குழாயை மீப்புப் படையினர் அனுப்பினர். சுரங்கத்தில் உள்ள ஒவ்வொருவரும் துணிவுடன் பயப்படாது விரைவு காட்டாது ஒருவர் பின் ஒருவராக வெளியே வந்தனர். சிலிநாட்டு அதிபரே அங்கு காத்திருந்து அவர்களை வரவேற்றார்.

சிலிநாட்டுச் சுரங்கப் பணியாளர்கள் மீட்கப்பட்ட அருஞ்செயல் மண்ணில் மகத்தான மனித சாதனையாகும்.

**வினாக்கள் :**

(i) தொழிலாளர்கள் எத்தனை பேர் ?

(அ) முப்பது

(ஆ) முப்பத்து மூன்று

(இ) முப்பத்தொன்பது

(ஈ) முப்பத்தாறு

(ii) சுரங்கத்துல் சிக்கிக் கொண்டவர்கள் எதனைக் காணாது அல்லல் பட்டனர் ?

(அ) பூமி

(ஆ) சூரியன்

(இ) விண்மீன்

(ஈ) சந்திரன்


Downloaded From : http://cbseportal.com/ Courtesy : CBSE

Downloaded From : http://cbseportal.com/

(iii) எவற்றை எடுப்பதற்காகச் சுரங்கம் வெட்டப்பட்டது ?

(அ) தாமிரம், இரும்பு

(ஆ) தங்கம், தாமிரம்

(இ) தாமிரம், பித்தளை

(ஈ) தங்கம், இரும்பு

(iv) சுரங்கத்தின் ஆழம் எவ்வளவு ?

(அ) மூவாயிரம் அடி

(ஆ) நாலாயிரம் அடி

(இ) ஆயிரம் அடி

(ஈ) ஈராயிரம் அடி

(v) தொழிலாளர்களைக் காத்திருந்து வரவேற்றவர் யார் ?

(அ) சிலிநாட்டு மன்னர்

(ஆ) சிலிநாட்டு அதிபர்

(இ) சிலிநாட்டு அரசர்

(ஈ) சிலிநாட்டு தொழிலாளர்

**2.** கீழ்வரும் பத்தியைப் படித்து அதனைத் தொடர்ந்து வரும் பல்விடை வினாக்களுக்குரிய சரியான விடைகளைத் தேர்ந்தெடுத்து எழுதுக : *5×1=5*

சுமார் 2800 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே தமிழ் நாட்டில் செப்புப் படிமக்கலை மிக உன்னத நிலையில் வளர்ச்சி பெற்றிருக்கிறது. திருநெல்வேலி மாவட்டம் ஆதிச்ச நல்லூரில் கிடைத்துள்ள தெய்வச் செப்புத்


Downloaded From : http://cbseportal.com/ Courtesy : CBSE

Downloaded From :http://cbseportal.com/

திருமேனி இதற்குத் தக்கதொரு சான்றாகும். அண்மைக் காலங்களில் கண்டுபிடிக்கப்பட்ட செப்புத் திருமேனிகளால் பல்லவர் காலத்தில் இக்கலை நல்ல வளர்ச்சியற்ற நிலையில் விளங்கியிருந்ததை அறியலாம். கூரம் நடராசர், கொடுமுடி திருபுராந்தகர், திரிபுர சுந்தரி போன்ற படிமங்களைப் பல்லவர் காலத் திருமேனிகளுக்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம். சிற்பங்களில் காணப்பெறும் அதே கலைப் பாணியைச் செப்பத் திருமேனிகளிலும் காணலாம்.

செப்புத் திருமேனியின் பொற்காலம் எனச் சோழர் காலத்தைக் குறிப்பிடலாம். எண்ணிக்கையிலும் அதிக அளவில் சோழர் காலத்தில்தான் செய்யப்பட்டிருக்கின்றன. செம்பியின் மாதேவி போன்ற சோழப் பேரரசிகள் செப்புத் திருமேனிகள் செய்தளிப்பதைத் தாம் இம்மண்ணுலகில் பிறந்ததன் கடமை என்று எண்ணினர். சோழர் காலத்துத் திருமேனிகள் கலை அழகும், கடவுள் தன்மையும் பொருத்தியவை. சிற்பக்கலை எவ்வாறு பிற்காலத்தில் சீரழிந்ததோ அதேபோன்று செப்புப் படிமக்கலையும் விசயநகர காலத்தில் சிறப்பிழந்து காணப்பட்டது.


Downloaded From :http://cbseportal.com/ Courtesy : CBSE

Downloaded From : http://cbseportal.com/

**வினாக்கள் :**

(i) பல்லவர் காலக் செப்புத் திருமேனிகளுள் ஒன்று ?

(அ) திரிபுரசுந்தரி

(ஆ) திகம்பர சுந்தரி

(இ) தில்லையம்பலச் சுந்தரி

(ஈ) சுந்தரி

(ii) செப்புத் திருமேனிகளின் பொற்காலம் எது ?

(அ) பாண்டியன்

(ஆ) சேரர்

(இ) சோழர்

(ஈ) புத்தர்

(iii) செப்புப் படிமங்கள் அதிகமாகக் கிடைக்கப்படும் மாவட்டம் எது ?

(அ) திண்டுக்கல்

(ஆ) திருநெல்வேலி

(இ) ஆதிச்சநல்லூர்

(ஈ) திருச்சி


Downloaded From : http://cbseportal.com/ Courtesy : CBSE

Downloaded From :http://cbseportal.com/

(iv) செம்பியன் மாதேவி எந்நாட்டுப் பேரரசி ?

(அ) பாண்டியநாடு

(ஆ) பல்லவநாடு

(இ) சோழநாடு

(ஈ) வடநாடு

(v) எம்மன்னனுடைய ஆட்சிக் காலத்தில் படிமக்கலை வளர்ச்சி குன்றியது ?

(அ) பல்லவ அரசு

(ஆ) விசயநகர அரசு

(இ) பாண்டிய அரசு

(ஈ) சோழ அரசு

**3.** பின்வரும் பத்தியைப் படித்து அதனை மூன்றில் ஒரு பங்காகச் சுருக்கி எழுதுக : *1×5=5*

நம் நாட்டின் முதுகெலும்பாக விளங்குவன கிராமங்கள் தான். இந்தியாவின் செல்வம் என்றால் நம் மண்ணில் விளையும் அனைத்து உணவுப் பொருட்களே. நம்மை நினைவுபடுத்தும். கிராமங்களில் கல்வி அறியாமையும், மூட நம்பிக்கையான எண்ணங்களையும் ஒழிக்க நம் முன்னோர்கள் காலங்காலமாகப் பாடுபட்டு வந்தனர்.



Downloaded From :http://cbseportal.com/ Courtesy : CBSE

Downloaded From :http://cbseportal.com/

“எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும் கண்ணென்ப வாழும் உயிர்க்கு”

எனக் கல்வியின் சிறப்பை அழகாகக் கூறினார் வள்ளுவர். ஒவ்வொரு இளம் வித்தின் கல்வி அறிவே, அந்நாட்டின் முன்னேற்றத்திற்கான அஸ்திவாரம் என்றார் ஓர் அறிஞர். நாம் அனைவரும் நம்மால் முயன்ற அளவு பாடுபட்டு கல்லாமை என்னும் நோயை நம் நாட்டை விட்டே ஓட்டுவோம். அதுவே, நம் இலட்சியத்தின் முதற்படி.

நாம் கூறியது போல கிராமங்கள் நாட்டின் சுவாசக் காற்று. அவை இப்போது கொஞ்சம் கொஞ்சமாக அழியத் தொடங்கி உள்ளன. நாகரிகம் வளர வளர, மக்கள் மண்வாசனையை அடியோடு மறக்கும் துயர நிலையை இனியும் தொடர விடாமல் இளைஞர்களாகிய நாம் நம் மூத்தவர்களுக்குக் கிராமங்களின் முக்கியத்துவத்தைப் புரியவைக்க வேண்டும். விவசாயம் என்பது ஒரு புனிதமான வேலை. நம் நாட்டின் செல்வம் என்றால் அதில் பசுமையும் ஒன்றே தவிர பணமும் பொருளும் இருந்தால் தான் அந்த நாடு ஒரு நாடு வல்லரசு நாடாகாது. இதை நமக்கு உணர்த்தவே நமது தேசியக் கொடியில் பச்சை நிறத்தைச் சேர்த்துள்ளனர் நம் முனனோர்கள்.


Downloaded From :http://cbseportal.com/ Courtesy : CBSE

Downloaded From :http://cbseportal.com/

## பிரிவு ஆ (எழுதுதல்)

**SECTION B (Writing)** *Marks : 14*

**4.** கொடுக்கப்பட்ட தலைப்புகளுள் ஒரு தலைப்பில் கடிதம் ஒன்று எழுதுக : *1×6=6*

(அ) நடைபாதைக் கடைகளை நீக்கக் கோரி பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்குக் கடிதம் ஒன்று எழுதுக.

**அல்லது**

(ஆ) உம் பள்ளியில் நடந்த விளையாட்டுத் தின நிகழ்ச்சி குறித்து நண்பனுக்குக் கடிதம் எழுதுக.

(எக்கடிதமாயினும் உன் முகவரி : எழிலன் / எழிலி, எண். 15, கம்பன் வீதி, அமைந்தகரை, சென்னை-29 எனக் கொள்க)

**5.** கொடுக்கப்பட்ட தலைப்புகளுள் ஏதேனும் ஒரு குறிப்பினைப் பயன்படுத்தி கட்டுரை ஒன்று எழுதுக : *1×8=8*

(அ) தலைப்பு – முன்னுரை – இராஜராஜ சோழன் – பெரிய கோயிலின் சிறப்புகள் – கல்வெட்டுகள் – பாதுகாப்பு நடவடிக்கைகள் – முடிவுரை.

(ஆ) தலைப்பு – முன்னுரை – பண்டைய மகளிர் – இடைக்கால மகளிர் – பெண்களின் மகுடம் – இன்றைய மகளிர் – முடிவுரை.

(இ) தலைப்பு – முன்னுரை – ஒற்றுமையின் அடித்தளம் – ஒற்றுமையின் பயன் – ஒற்றுமையை பாதுகாத்தல் – ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு – முடிவுரை.


Downloaded From :http://cbseportal.com/ Courtesy : CBSE

Downloaded From :http://cbseportal.com/

## பிரிவு இ (இலக்கணம்)

**SECTION C (Grammar)** *Marks : 15*

**6.** சான்று தருக (**எவையேனும் மூன்றனுக்கு** மட்டும்) : *3×1=3*

(i) ஐகாரக் குறுக்கம்

(அ) நெருப்பு

(ஆ) ஐம்பது

(இ) எஃகு

(ஈ) போன்ம்

(ii) குறிப்பு வினைமுற்று

(அ) உழவன்

(ஆ) வந்தான்

(இ) அவன்பொன்னன்

(ஈ) விளையாடினான்

(iii) இனங்குறித்தல்

(அ) வெற்றிலை தின்றான்

(ஆ) ஐவர் கோலமிட்டனர்

(இ) அன்றே அன்றே

(ஈ) மடமட


Downloaded From :http://cbseportal.com/ Courtesy : CBSE

Downloaded From :http://cbseportal.com/

(iv) உருவகம்

(அ) விற்புருவம்

(ஆ) புருவம்

(இ) புருவ வில்

(ஈ) வில்புருவம்

(v) அடி அகரம் ஐஆதல்

(அ) சிற்றோடை

(ஆ) சேதாம்பல்

(இ) கருங்குயில்

(ஈ) பைங்கூழ்

**7.** கோடிட்ட இடங்களை நிரப்புக **(எவையேனும் மூன்றனுக்கு** மட்டும்) : *3×1=3*

(i) நிலைமொழியின் ஈற்றெழுத்தும் வருமொழியின் முதல் எழுத்தும் சேர்வது _______________ ஆகும்.

(அ) குறுக்கம்

(ஆ) புணர்ச்சி

(இ) வினைச்சொல்

(ஈ) ஆய்தம்


Downloaded From :http://cbseportal.com/ Courtesy : CBSE

Downloaded From : http://cbseportal.com/

(ii) நெய்தல் திணைக்குரிய தொழில் ___________ ஆகும்.

(அ) வழிப்பறி, நிரை கவர்தல்

(ஆ) நெல்லரிதல், களை பறித்தல்

(இ) மீன்பிடித்தல், உப்பு விளைத்தல்

(ஈ) ஏறுதழுவுதல், நிரை மேய்த்தல்

(iii) ஆசிரியப்பாவின் ஓசை ________ .

(அ) செப்பலோசை

(ஆ) அகவலோசை

(இ) துள்ளலோசை

(ஈ) தூங்கலோசை

(iv) அணி என்னும் சொல்லுக்கு ________ என்பது பொருள்.

(அ) அலகு

(ஆ) பகாப்பதம்

(இ) அழகு

(ஈ) அளகு

(v) புறத்திணைகள் ________ வகைப்படும்.

(அ) ஐந்து

(ஆ) ஏழு

(இ) ஒன்பது

(ஈ) பன்னிரண்டு


Downloaded From : http://cbseportal.com/ Courtesy : CBSE

Downloaded From :http://cbseportal.com/

8. கூறியவாறு செய்க **(எவையேனும் மூன்றனுக்கு** மட்டும்) : *3×1=3*

(i) தற்குறிப்பேற்ற அணி (பிரித்து எழுதுக)

(அ) தன் + குறிப்பு + ஏற்றம் + அணி

(ஆ) தன் + ஏற்றம் + அணி

(இ) தன் + குரிப்பு + ஏற்றம் + அணி

(ஈ) தன் + ஏற்றம் + அணி

(ii) சிறப்பு (அசை கூறுக)

(அ) நிரை + நேர்

(ஆ) நிரை + நிரை

(இ) நேர் + நேர்

(ஈ) நேர் + நேர் + நேர்

(iii) வந்தான் (ஓரெழுத்துச் சொல்லாக்குக)

(அ) வருக

(ஆ) வா

(இ) வந்து

(ஈ) வந்த

(iv) மரம் முறிந்தது (சரியான இரட்டைக் கிளவியை இணைத்துத் தொடராக்குக)

(அ) குடுகுடு

(ஆ) படபட

(இ) கடகட

(ஈ) சடசட

(v) பருப்பு உள்ளதா ? (எவ்வகை வினா)

(அ) ஐயவினா

(ஆ) கொளல் வினா

(இ) ஏவல் வினா

(ஈ) கொடைவினா


Downloaded From :http://cbseportal.com/ Courtesy : CBSE

Downloaded From :http://cbseportal.com/

**9.** இலக்கணக்குறிப்பு தருக **(எவையேனும் மூன்றனுக்கு** மட்டும்) : *3×1=3*

(i) தேன்மொழி

(அ) உருவகம்

(ஆ) உவம உருபு

(இ) விரியுவமை

(ஈ) தொகையுவமை

(ii) தீதீதீ

(அ) அடுக்குத் தொடர்

(ஆ) இரட்டைக் கிளவி

(இ) இனங்குறித்தல்

(ஈ) ஒன்றொழிப் பொதுச்சொல்

(iii) வௌவால்

(அ) ஐகாரக்குறுக்கம்

(ஆ) மகரக்குறுக்கம்

(இ) ஆய்தக்குறுக்கம்

(ஈ) தொகையுவமை

(iv) பாடம் படித்தான்

(அ) தனிமொழி

(ஆ) தொடர் மொழி

(இ) பொதுமொழி

(ஈ) இனமொழி

(v) மெல்லப் பேசினான்

(அ) தெரிநிலை வினையெச்சம்

(ஆ) குறிப்பு வினையெச்சம்

(இ) தெரிநிலைப் பெயரெச்சம்

(ஈ) குறிப்புப் பெயரெச்சம்


Downloaded From :http://cbseportal.com/ Courtesy : CBSE

Downloaded From : http://cbseportal.com/

**10.** சரியான சொற்றொடரைத் தேர்ந்தெடுத்து எழுதுக :
(**எவையேனும் மூன்றனுக்கு** மட்டும்) : *3×1=3*

(i) (அ) விடை எண் வகைப்படும்
(ஆ) விடை ஆறு வகைப்படும்
(இ) விடை ஏழு வகைப்படும்
(ஈ) விடை பத்து வகைப்படும்

(ii) (அ) முதலெழுத்துக்கள் மொத்தம் இருபது
(ஆ) முதலெழுத்துக்கள் மொத்தம் பத்து
(இ) முதலெழுத்துக்கள் மொத்தம் பன்னிரண்டு
(ஈ) முதலெழுத்துக்கள் மொத்தம் முப்பது

(iii) (அ) முழுமையடையாத வினைச்சொற்கள் முற்று எனப்படும்.
(ஆ) முழுமையடையாத வினைச்சொற்கள் வினைமுற்று எனப்படும்.
(இ) முழுமையடையாத வினைச்சொற்கள் எச்சம் எனப்படும்.
(ஈ) முழுமையடையாத வினைச்சொற்கள் முற்றெச்சம் எனப்படும்.

(iv) (அ) சொல்லுக்கு முதலில் மட்டுமே வரும் குறுக்கம் ஐகாரம்.
(ஆ) சொல்லுக்கு முதலில் மட்டுமே வரும் குறுக்கம் ஔகாரம்.
(இ) சொல்லுக்கு முதலில் மட்டுமே வரும் குறுக்கம் மகரம்.
(ஈ) சொல்லுக்கு முதலில் மட்டுமே வரும் குறுக்கம் ஆய்தம்.


Downloaded From : http://cbseportal.com/ Courtesy : CBSE

Downloaded From :http://cbseportal.com/

(v) (அ) விரியுவமையின் வேறு பெயர் உவமைத்தொகை.

(ஆ) விரியுவமையின் வேறு பெயர் வேற்றுமைத்தொகை.

(இ) விரியுவமையின் வேறு பெயர் உவமைத்தொடர்.

(ஈ) விரியுவமையின் வேறு பெயர் உவமத் தொடர்.

## பிரிவு ஈ (இலக்கியம்/தமிழ்ப் பாடநூல்கள்)

## SECTION D (Literature / Text Books)

*Marks : 36*

**11.** பின்வரும் உரைநடைப் பத்தியைப் படித்து அதனைத் தொடர்ந்து வரும் வினாக்களுக்கு விடை எழுதுக : *5×1=5*

காந்தியடிகள் சிறுவனாக இருந்தபோது, குஜராத்திப் பாடல் ஒன்றைக் கேட்டார். தாகத்திற்கு நீர் தருவதில் ஒன்றுமில்லை; தீமை செய்தவர்க்கும் நன்மையே செய், உண்மைப் பொருண்மை உண்டு என்ற அப்பாடல் இன்னா செய்யாமை (அஹிம்சை) என்னும் கருத்தினை அவருள் விதைத்தது. அவர் பள்ளியில் படித்துக் கொண்டிருந்த போது சிரவண பிதுர்பத்தி என்ற ஒரு நாடக நூலைப் படித்தார். அதில் சிரவணன் என்ற இளைஞன் பார்வையற்ற தன் தாய் தந்தையரைக் காவடியில் தூக்கிச் செல்லும் ஒரு காட்சிப்படம் இருந்தது. அதனைப் பார்த்தது முதல், தாமும் பெற்றோரிடம் அன்பு செலுத்த விரும்பினார்.


Downloaded From :http://cbseportal.com/ Courtesy : CBSE

Downloaded From : http://cbseportal.com/

அரிச்சந்திரன் நாடகத்தைக் காந்தி ஒரு முறை பார்த்தார். உண்மையை மட்டுமே பேசும் அரசன் அரிச்சந்திரனை ஒரு பொய் பேச வைக்க வேண்டுமென்பதற்காகவே பல இன்னல்களுக்கு உள்ளாக்குகிறார் முனிவர் விசுவாமித்திரர். அதனால் அரிச்சந்திரன் நாட்டையும் மனைவியையும் ஒரே மகனையும் இழக்கிறான். சுடுகாட்டில் பணிபுரிகிறான். முனிவர் பல்வேறு இன்னல்களை இழைத்தும். "பொய் சொல்லேன்" என்று மறுமொழி கூறினான். அவனது வாய்மையை நாடகம் வாயிலாக உணர்ந்த காந்தியடிகள் தாம் ஒரு சத்தியவானாக இருக்க வேண்டும் என உறுதிகொண்டார்.

**வினாக்கள் :**

(i) காந்தியடிகள் பள்ளியில் படித்துக் கொண்டிருந்த போது எந்த நூலைப் படித்தார் ?

(ii) காந்தியடிகள் எக்கொள்கையைப் பின்பற்றினார் ?

(iii) அரிச்சந்திரன் நாடகத்தைப் பார்த்துக் காந்தியடிகள் கற்றுக் கொண்டது என்ன ?

(iv) அரிச்சந்திரனுக்கு இன்னல்களைச் தந்த முனிவர் யார் ?

(v) "இன்னா செய்யாமை" பொருள் தருக.


Downloaded From : http://cbseportal.com/ Courtesy : CBSE

Downloaded From : http://cbseportal.com/

**12.** பின்வரும் செய்யுட் பகுதியைப் படித்து அதனைத் தொடர்ந்து வரும் பல்விடை வினாக்களுக்கு உரிய விடைகளை எழுதுக : *4×1=4*

அதிர்ந்தி டுந்தொனி செவியுற அடவியில் அடைந்த
முதிர்ந்த மேதியும் கவையடிக் கேழலும் முழுதும்
பொதிந்த மெய்மயி ரெண்கினங் களுமரைப் போத்தும்
பதிந்த கால்தடு மாறிட வீழ்ந்துடல் பதைக்கும்

**வினாக்கள் :**

(i) இப்பாடல் இடம் பெற்ற நூலின் பெயர் என்ன ?

(அ) தமிழ்விடு தூது

(ஆ) சீறாப்புராணம்

(இ) தேவாரம்

(ஈ) நந்திக்கலம்பகம்

(ii) இந்நூலின் ஆசிரியர் யார் ?

(அ) திருநாவுக்கரசர்

(ஆ) இளந்திரையன்

(இ) சேக்கிழார்

(ஈ) உமறுப்புலவர்

(iii) மேதி என்ற சொல்லின் பொருள் என்ன ?

(அ) சிங்கம்

(ஆ) கரடி

(இ) எருமை

(ஈ) மான்





Downloaded From : http://cbseportal.com/ Courtesy : CBSE

Downloaded From : http://cbseportal.com/

(iv) விலங்கினங்களைப் பதைக்கச் செய்த விலங்கு எது ?

(அ) புலி

(ஆ) சிங்கம்

(இ) மான்

(ஈ) சிறுத்தை

**13.** பின்வரும் குறட்பாக்களில் விடுபட்ட சீர்களை எழுதுக : $4\times\frac{1}{2}=2$

(அ) உலகத்தோ டொட்ட ____________ , பலகற்றும் கல்லார் __________ தார்.

(ஆ) செய்க பொருளைச் ______________ செருக்கறுக்கும் எஃகதனிற் ____________ தில்.

**14.** பின்வரும் செய்யுள் வினாக்களுள் எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடை தருக : $2\times4=8$

(i) கண்ணகிக்கும் பாண்டிய மன்னன் நெடுஞ்செழியனுக்கும் நடந்த சொற்போரினை உரையாடலாக அமைத்து எழுதுக.

(ii) ஒழுக்கமுடைமை பற்றி வள்ளுவர் கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

(iii) அப்பூதீயடிகளார் இல்லத்தில் நிகழ்ந்ததனை விவரிக்க.

(iv) (அ) ஏலாதி - நூற்குறிப்பு தருக.

(ஆ) பழியில்லா மன்னனாய் வாழ்பவனின் பண்புகளாகக் கணிமேதாவியார் குறிப்பிடுவன யாவை ?



Downloaded From : http://cbseportal.com/ Courtesy : CBSE

Downloaded From :http://cbseportal.com/

**15.** பின்வரும் உரைநடை வினாக்களுள் எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடை தருக : *2×5=10*

(i) செம்மொழிக்குரிய எவையேனும் ஐந்து தகுதிப்பாடுகளை விளக்கி எழுதுக.

(ii) வள்ளலார் ஏற்படுத்திய சமரச சுத்த சன்மார்க்க சங்கம் குறித்துக் கட்டுரை எழுதுக.

(iii) அம்பேத்கரின் அரும்பணிகள் குறித்துத் தொகுத்து எழுதுக.

(iv) தமிழன் அறிவியலின் முன்னோடி என்பதனை விளக்குக.

(v) மேடைப் பேச்சு சிறப்புற அமைவதற்கான வழிவகைகள் யாவை ?

**16.** பின்வரும் தலைப்புகளுள் ஏதேனும் ஒரு தலைப்பின் கீழ் துணைப்பாடக் கட்டுரை எழுதுக : *1×7=7*

(i) அன்றாட வாழ்வில் சட்டம்

(ii) அடித்தளம்

(iii) அயோத்திதாசப் பண்டிதர்


Downloaded From :http://cbseportal.com/ Courtesy : CBSE